

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (21.5.2025) சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளரங்க இறகு பந்து மைதானம் கட்டும் பணிக்காக சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் 2.25 கோடி ரூபாய்க்கான காசோலையை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே.சேகர்பாபு வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.5.2025) முகாம் அலுவலகத்தில், தங்களின் இடைக்கால பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக சந்தித்த 2013 ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த (BATCH) இந்திய வெளியுறவுப் பணி அலுவலர்கள், வெளிநாட்டு முதலீடுகளை கவர்ந்து இழுக்கும் இடமாக தமிழ்நாடு திகழ்வதற்காக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசிற்கு தங்களது பாராட்டுகளைத் தெரிவித்தனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை தேனாம்பேட்டையில் அண்ணா அறிவாலய பணியாளர் கே.கார்த்திக் பிரியன் – பெ.தீபிகா இணையரின் திருமண வரவேற்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.5.2025) கலந்து கொண்டு வாழ்த்தினார். உடன் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., கழகத்தினர் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான

# சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு!

## மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் பேட்டி!



**சென்னை, மே 23-**

**துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளதாக மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பான வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசு சார்பில் வழக்கறிஞர் வில்சன் காணொலி மூலம் ஆஜராகி வாதிட்டார்.

துணைவேந்தர் நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை உச்சநீதிமன்றத்திற்கு மாற்றக் கோரிய மனு விசாரணையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பா.ஜ.க. பிரமுகர் அரசியல் உள்நோக்கத்துடன் தொடர்ந்துள்ள இந்த வழக்கில், அரசுக்கு போதுமான வாய்ப்பளிக்காமல் விசாரணை நடத்துவது முறையல்ல என்றும் அவர் வாதிட்டார்.

இருப்பினும் துணைவேந்தர்கள் நியமன சட்டத்திற்கு இடைக்காலத் தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய வழக்கறிஞர் வில்சன், சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளதாகத் தெரிவித்தார்.





# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மாவட்டங்களுக்கு 3 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**23/05/2025 வெள்ளிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| மாலை 6.00 மணி | பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சிலைக்கு மாலை அணிவித்தல் | ஒத்தக்கடை, திருச்சி. |
| மாலை 6.30 மணி | டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு விழா | புதுக்கோட்டை - பட்டுக்கோட்டை சாலை, கந்தர்வக்கோட்டை. |
| இரவு 7.30 மணி | மாநில அளவிலான கபடிப் போட்டியைத் தொடங்கி வைத்தல் | மங்களாக்கோவில், கந்தர்வக்கோட்டை. |

**24/05/2025 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | அரசு திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் | ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை. |
| காலை 11:30 மணி | வீட்டுமனைப் பட்டா மற்றும் 'கலைஞர் கனவு இல்லம்' திட்ட அரசாணை வழங்குதல் | ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை. |
| மதியம் 12:30 மணி | புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் | கற்பக விநாயகா திருமண மண்டபம், மாலையீடு. |
| மாலை 04:00 மணி | 'மிசா' துரை மாணிக்கம் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி | ஏ.என்.எஸ்.பிரைட் ஹோட்டல் மினி ஹால், புதுக்கோட்டை. |
| மாலை 04:30 மணி | மகளிர் சுய உதவிக் குழுவினருடன் சந்திப்பு | 9-ஏ, நத்தம் பண்ணை, புதுக்கோட்டை. |
| மாலை 05:30 மணி | கழக மருத்துவ அணி மாநில கருத்தரங்கம் | பள்ளத்துவயல், திருச்சி பைபாஸ் சாலை, புதுக்கோட்டை. |
| மாலை 06:30 மணி | திருநங்கைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல் | கல்லுக்குழியல்பட்டி, இளையாவயல், புதுக்கோட்டை. |

**25/05/2025 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 09:30 மணி | கழக இளைஞர் அணி மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | கோர்ட் யார்டு ஹோட்டல், திருச்சி. |
| மதியம் 12:30 மணி | ஆர்.சிவராம் பிரசாத் - ஏ.காவ்யா இணையரின் திருமண வரவேற்பு விழா | ஸ்ரீ காமாட்சி மஹால், வேலாயுதம்பாளையம், கரூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-05-2025

